[1982 பிப்ரவரி 10

இராமச்சந்திரபுரம் நீர்ப்பாசனக் குளத்தின் உட்பகுதியில் செய்யப்பட்டுள்ள நில ஆக்கிரமிப்பு.

*வினா எண் 135—திரு. ரா. கு. பெருமாள்: மாண்புமிகு நீர்ப்பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) விளாத்திகுளம் தொகுதி இராம சந்திரபுரம் நீர்ப்பாசனக் குளத்தின் உள்பகுதி அரசு நிலங்களில் அதே ஊரைச் சேர்ந்த கிராம அதிகாரியும் முன்னாள் ஊராட்சி தலைவரும் சட்டத்திற்கு புறம்பாக விவசாயம் செய்வது அரசுக்குத் தெரியுமா ?

(ஆ) ஆம் எனில், அரசு இதன்மீது எடுத்துள்ள நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : (அ) ஆம்.

(ஆ) ஆக்கிரமிப்பு செய்ததற்கு அபராதம் வசூலிக்கத் தேவையான நடவடிக்கையை விளாத்திக்குளம் வட்டாட்சியர் தமிழ்நாடு நில ஆக்கிரமிப்புச் சட்டத்தின் கீழ் எடுத்துள்ளார். இது குறித்து வட்டாட்சியர் அறிக்கை கிடைத்த பின், மேற்படி சட்டத்தின் கீழ் ஆக்கிரமிப்புகளை அகற்ற தேவையான மேல் நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்று சிறுபாசனத் தலைமைப் பொறியாளர் தெரிவித்துள்ளார்.

குண்டாற்றின் குறுக்கே கட்டப்பட்டுள்ள நீர்த் தேக்கம்.

*வினா எண். 136—திரு. எம். பிச்சை: மாண்புமிகு நீர்ப்பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) அருப்புக்கோட்டை தொகுதி இலுப்பையூர் அருகாமையில் குண்டாற்றின் குறுக்கே கட்டப்பட்டுள்ள நீர்த்தேக்கம் 1979-1980-ஆம் ஆண்டு வெள்ளத்தால் அடித்துச் செல்லப்பட்டுள்ளது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அதன் மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : (அ) அணைக்கட்டு சேதமடையவில்லை. அணைக்கட்டை சார்ந்த சில பகுதிகள் (Appurtenant work) சேதமடைந்தன.

(ஆ) சேதமடைந்த பகுதிகளை பழுது பார்த்து நிரந்தர நிவாரண வேலைகள் செய்யத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.